முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No.123/2021

Witness-DW-2

பெயர் / பாண்டியன்

**த.பெ – மன்னார்**

**இன்று (21.1.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான், வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும், பிரதிவாதிகள் நதியா இ ராதா ஆகியோர்கள் மீது வாதி பூபதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் அவர்கள் வீடு காலி செய்து கொடுக்கவேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார், வழக்கு ஆவணத்தைப் பொருத்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும், தற்போது என்னிடம் காட்டப்படும் வா,சா ஆ2 ஆவணம் என்ன தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஒ கிரைய ஆவணம்ஒ என்று தான் எழுதப்பட்டுள்ளது, வா,சா,ஆ2 கிரைய ஆவணம் எழுதியபோது அதில் நான் ஒரு சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான், வா,சா,ஆ2 உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான், சந்திரசேகர் த.பெ, வடிவேலு என்பவர் அதில் முதல் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான், வா,சா,ஆ2 கிரையப் பத்திரத்தில் ராதாஇ (2ம் பிரதிவாதி)இ ஜோதிஇ ஆதிமூலம்இ பவுனாம்பாள் ஆகியோர்கள் சார்பதிவாளர் அலுவலகம் வந்து கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால் சரிதான், கிரைய ஆவணத்தின் உள் அடக்கங்களை தெரிந்து சாட்சியாக கையெழுத்திட்டுவிட்டுஇ அதனை முறியடிக்க பொய்யான தகவல்களை கொண்டு முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வாதி என்னை சாட்சியாக அழைத்தாகவும் நான் வர மறுத்ததாகவும் பொய்யாக தகவல்களை பிரதிவாதிக்கு சாதகம் செய்வதற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, ஏற்கனவே பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை வழங்கப்பட்டுஇ சொத்தை சுவாதீனம் எடுக்க நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் தான் இந்த வழக்கு மீண்டும் நடைபெறுகிறது என்றால் சரிதான், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பற்றி தெரியுமா என்றால் தெரி யும், நான் தாக்கல் செய்துள்ள முதன்மை

சாட்சியத்திலுள்ள விவரங்கள் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, தாவா சொத்தின் பட்டா மற்றும் தாவா சொத்திலுள்ள மின்னிணைப்பு வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான், தாவா சொத்தின் வீட்டுவரி ரசீது வாதி தான் செலுத்திவருகிறார் என்றால் சரிதான், மின் கட்டணம் வாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது, பிரதிவாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு அனுகூலம் செய்ய பொய்யான தகவல்களை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Thiru.A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram